கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

அ.வ.எண்.256/2023

வாதி தரப்பு 1 வது சாட்சி வெங்கடேஷ் என்பவரின் வாக்குமூலம் (1869 ம் ஆண்டு சாட்சியசட்டம் 44 வது பிரிவு 6 வது விதியின் ஏற்பாட்டின்படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேஷ் | சாதி | |
| கணவார்/ தகப்பனார்பெயர் | வெங்கட்ராமன் | சமயம் | இந்து |
| கிராமம் | ஐயம்பாக்கம் | தொழில் | IT Company |
| தாலுகா | திருவள்ளூர் | வயது | 34 |

நாள் : 30.01.2025

வா.சா.1

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் 2 ம்வாதி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. 1, 2, 3, 4 ஆகிய வழக்கு சொத்துக்களுக்கான கிருஷ்ணம்மாள் பெயரில் உள்ள பட்டா கணிணி நகல் **வா.சா.ஆ.1**. 21.06.1994 அன்று கிருஷ்ணம்மாள், முத்தாழம்மாளுக்கு எழுதி கொடுத்த உயில் ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2.** கிருஷ்ணம்மாள் பெயரில் உள்ள "ஆ" பதிவேடு கணிணி நகல் **வா.சா.ஆ.3.** கிருஷ்ணம்மாள் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.4.** வெங்கட்ராமனின் இறப்பு சான்றிதழ் கணிணி நகல் **வா.சா.ஆ.5.** வெங்கட்ராமனின் வாரிசு சான்றிதழ் கணிணி நகல் **வா.சா.ஆ.6.** 03.01.2014 ம் தேதியிட்ட முத்தாழம்மாள், வெங்கட்ராமன், நாகஜோதி, குமாரம்மாள் ஆகியோருக்கு எழுதி வைத்த உயில் ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7.**

11.05.2014 ம் தேதியிட்ட உயில் ஜாசன ரத்து பத்திரம் **வா.சா.ஆ.8.** முத்தாழம்மாளினின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.9.** 27.07.2023 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.10.** சொத்துக்கள் மதிப்பீட்டு விபரம் **வா.சா.ஆ.11.**